# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை றிபாய் தரீக் சங்கம் (கூட்டிணைத்தல்)
## (திருத்தம்)

***1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை றிபாய் தரீக் சங்கம்***
***(கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா அவர்களால் 2017, செத்தெம்பர் மாதம் 19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, ஓகத்து மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*


*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

*[ **206 ஆம் சட்டமூலம்** ]*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 12.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

## இலங்கை றிபாய் தரீக் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்)

### 1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை றிபாய் தரீக் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தால் இலங்கை றிபாய் தரீக் சங்கம் கூட்டிணைக்கப்பட்டதாதலாலும்:

முன்னுரை.

இலங்கை றிபாய் தரீக் சங்கம் அதன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அதன் குறிக்கோள்களை மேலும் பயனுறுதியுடன் நிறைவேற்றும் நோக்கத்துக்காக மேற்படி 1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்யவேண்டுமென தீர்மானித்துள்ளதாதலாலும்:

மேற்கூறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் முகாமைக்குழு மேற்கூறப்பட்ட தீர்மானத்திற்கு பயனளிக்கும் நோக்கத்துக்காக மேற்கூறப்பட்ட சட்டத்திற்கு திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளதாதலாலும்; அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை றிபாய் தரீக் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப்பெயர்.

**2.** 1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை றிபாய் தரீக் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 3 ஆம் வாசகம் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :-

(1) (எ) என்னும் விடயம் நீக்கிவிடப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் வாசகத்தைத் திருத்துதல்.

"(எ) இலக்கம் 30, றிபாய் தங்கள் ஒழுங்கை, கொழும்பு 12இல் அமைந்துள்ள முகையத்தீன் தக்கியாவை நிருவகிப்பதும் முகாமைசெய்வதும் கொண்டு நடாத்துவதும்;"

2-PL 005390 - 300 (2017/08)

(2) விடயம் (ஏ) இற்கு உடனடுத்து பின்வரும் புதிய விடயங்களை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஐ) ஆண்கள் மற்றும் மகளிருக்கான பாடசாலையினை நிறுவி உயர்கல்வி வரைக்கும், மேலும் அல்குர் ஆன், அரபு மொழி மற்றும் அல் ஆலிம்/ அல் ஆலிமா, மௌலவி/ மௌலவியா உள்ளடங்கிய வேறு பாடத் திட்டங்களை கற்பிப்பதற்கும்;

(ஒ) வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களை நிறுவுதல்;

(ஓ) வெலிகம, கப்புவத்தையில் அமைந்துள்ள றிபாயிய்யா மகளிர் அரபுக் கல்லூரியை நிருவகிப்பதும், முகாமை செய்வதும் கொண்டு நடாத்துவதும்;

(ஔ) வெலிகம, கப்புவத்தையில் அமைந்துள்ள றிபாயிய்யா ஆண்கள் அரபுக் கல்லூரியை நிருவகிப்பதும், முகாமை செய்வதும் கொண்டு நடாத்துவதும்;

(க) வெலிகம, கப்புவத்தையில் அமைந்துள்ள முகையத்தீன் ஜும்மா மஸ்ஜிதையும் அதன் சொத்துக்களையும் நிருவகிப்பதும், முகாமை செய்வதும் கொண்டுநடாத்துவதும்;

(ங) வெலிகம, கப்புவத்தையில் அமைந்துள்ள றிபாயிய்யா குர்ஆன் மத்ரஸாவை நிருவகிப்பதும், முகாமை செய்வதும் கொண்டுநடாத்துவதும்;

(ச) சங்கத்தின் அசையும் மற்றும் அசையா ஆதனங்களை நிருவகிப்பதும், முகாமை செய்வதும் கொண்டுநடாத்துவதும்;".

*1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் வாசகத்தைத் திருத்துதல்.*

**3.** 1976 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, இலங்கை றிபாய் தரீக் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 5 ஆம் வாசகத்தின் (2) ஆம் உட்பந்திக்கு உடனடுத்து பின்வரும் விடயத்தை சேர்ப்பதன்மூலம் மேலும் திருத்தப்படுகின்றது:-

"*(3) சங்கத்தின் ஸ்தாபகரான ஆன்மீகத் தலைவரின் இறப்பு அல்லது கேட்டுவிலகல் மூலமான வெற்றிடத்திற்கு சங்கைக்குரிய றிபாய் மௌலானா தங்கள், யூ.பி. செய்யித் முகம்மத் ஆசிக் தங்கள் அவர்கள் ஆன்மீகத் தலைவராக வரவேண்டுமென்பதுடன் அவரைத் தொடர்ந்து பதவியை அவருடைய குடும்ப உறுப்பினர், ஆன்மீகத் தலைவராக வருதலும் வேண்டும்.*".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*